முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி மார்கழி மாதம் 1ம் திகதி முதல் மார்கழி மாதம் 8ம் திகதி வரை**

**டிசம்பர் 16ம் திகதி முதல் டிசம்பர் 23ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. **பக்திக்கு குறைவில்லா பாரதமே**
**பயபக்தி பண்புகள் செறிந்த**
**சக்திமிகு ஆலயங்கள் சித்தர் பீடங்கள்**
**சர்வபலம் கொண்ட தமிழகமே**
2. **தமிழகம் இந்தியாவின் தன்னில்**
**தக்க விளம்பி சாப திங்களில்**
**நேமமுள ஏகதிகதி மேல் அட்டம திகதி வரை**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 1ம் நாள் 16.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 8ம் நாள் 23.12.2018, ஞாயிறு முடிய)**
**நிகழ்வாக எதிர்கால பலன் தன்னை**
3. **தன்னிலே சுப்பிரமணியர் யானும்**
**தாமுரைப்பேன் வார ஆசியாக**
**மண்ணுலகை சரி செய்ய வேண்டி**
**மக்களை பாதுகாக்க வேண்டி**
4. **வேண்டியே ஞான சக்திகள்**
**வினவிடுவேன் பரவி வந்தாலும்**
**தொண்டுமனம் இல்லா ஆளுமைகள்**
**தெய்வீக  எதிர்மறை செயல்பாடுகள்**
5. **செயல்பாடுகள் அதிகார வர்க்கமதின்**
**சேவை மறந்த சுயநலமானச் சூழல்கள்**
**தயவை மறந்த காரணத்தால்**
**தமிழகம் மற்றும் தென்னகப் பகுதிகள்**
6. **பகுதிகளுடன் பரதத்தின் சில பகுதியும்**
**பாடிடுவேன் இயற்கை பிடி வழி**
**பகுதி பகுதியாக பேரிடர் சிக்கல்**
**பாழ்பட்டு தவிப்பு பெருக நேரும்**
7. **நேருமை இழந்த நீதி காப்பில்லா**
**நடப்பால் இனி வரும் சூழலும்**
**நீரு நெருப்பு காற்று என்னும்**
**நீதி சக்திகளால் இடர்பட நேரும்**
8. **நேருமை இழந்த சூழல் தொடர்ந்தால்**
**நிர்வாகக் கேடு நிதி பற்றாக்குறை**
**வறுமை வளர்ச்சியிலா பின்னடைவு**
**வலுவிழந்து இந்தியாவும் தமிழகமும்**

9. தமிழகமும் உலக நாடுகளில்
தலை குனிவு காண நேரும்
நேமமுடன் அன்னதனால் தன்னலம்விட்டு
நேசம்பட சமூக உலக நலம் கருதும்

10. கருதும் சக்திகளாக ஆளுமை அதிகாரிகள்
கருணைபட சகலரும் சிறந்து
வருமுலகில் தொண்டு ஆற்றவே
வளர்ச்சி நிலைக்கு வருதல் காண்கும்

11. காண்குமே இயற்கை பேரிடர்
கஷ்டங்கள் அணுகா பாதுகாப்பு பெறும்
உண்மை ஆன்மீக வழிகாட்டி
உலகை காக்க மாதவசியாக வந்த

12. வந்தநல் துறையூர் வாழ் ஞானி
வள்ளல் அரங்கன் நாமசெபம்
சிந்தை வைத்து கொள்கை ஏற்க
சேவை கலந்து தயவை பெருக்க

13. பெருக்கவே அனைத்து மக்களுக்கும்
பேதமிலா பாதுகாப்பு கூடும்
வருத்தமான பின்னடைவுகள் விலகி
வளரும் வளம் பெறும் இந்தியா தமிழகம் வார ஆசி முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் மார்கழி மாதம் 1ம் நாள் 16.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 8ம் நாள் 23.12.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார கால நிகழ்வுகள்**

பக்தி மிகுந்ததும் பக்திமான்களை குறைவின்றி நிறைவாக கொண்டதுமான பாரத தேசத்திலும் பயபக்தி பண்புகள் மிகுந்த சக்திமிக்க ஆலயங்கள் நிறைந்ததும், சித்தர் பீடங்கள் நிறைந்ததும் சர்வபலம்மிக்க தமிழகத்திலும் விளம்பி வருடம் மார்கழி மாதம் 1ம் நாள் 16.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 8ம் நாள் 23.12.2018 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை எதிர்கால பலன்களாக வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உலக நலன் கருதி உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

இந்த உலகினில் உள்ள தீமைகளைப் போக்கி நன்மைகளை பெருக்கி உலகினை சரி செய்திடவும், மக்கள் படும் துன்பங்களிலிருந்து அவர்களை மீட்டு காத்திடவும் வேண்டி ஞானசக்திகள் எல்லாம் உலகமெங்கும் பரவி செயல்பட்டு வருகின்றன. ஆனாலும் தொண்டுள்ளம் இல்லாமல் சுயநலமாக செயல்படுகின்ற ஆட்சியாளர்களும் தெய்வீக சக்திகளுக்கும் தெய்வங்களுக்கும் எதிரான தெய்வ நம்பிக்கையற்ற செயல்பாடுகளினாலும், அதிகார வர்க்கத்தில் உள்ளவர்கள் சேவை மனப்பான்மை இல்லாமல் சுயநலம்பட செயல்படுகின்றதினாலும் மக்களை காக்க வேண்டியவர்கள், தயவினை மறந்து தயவு தாட்சண்யம் இன்றி செயல்படுவதினாலும் தமிழகம் மற்றும் தென்னக பகுதிகள் மற்றும் பாரத தேசத்தின் சில பகுதிகளும் இயற்கையின் கோரப்பிடியினுள் அகப்பட்டு பகுதிபகுதியாக இயற்கை பேரிடர்களில் சிக்கி தேசமே பாழ்பட்டுபோய் மக்களெல்லாம் செய்வதறியாமல் தவிக்கின்ற நிலை உருவாகிடுமப்பா. நேர்மையும், நீதியுமில்லாமல், நீதியின் பாதுகாப்பும் இல்லாமல் நடக்கின்ற செயல்பாடுகளினால் இனிவரும் காலங்கள் நாட்டினில் நீரினாலும், நெருப்பினாலும், காற்றினாலும் நாடு துன்பப்பட நேரும். நீதியின் சக்திகளான

**நீரும், காற்றும், நெருப்பும் நீதிமறந்த காரணத்தால் நன்மை செய்யாமல் தீமையான விளைவுகளை உண்டாகும் சூழ்நிலை உருவாகும்.**

**இப்படியே நாட்டிலுள்ளோர் நேர்மையற்ற செயல்களை செய்து நேர்மையும் நீதியும் இன்றி நடக்கின்ற சூழ்நிலை தொடருமேயானால் நிர்வாகச் சீர்கேடுகள் உண்டாகும், நிதி பற்றாக்குறையும் ஏற்பட்டு நாட்டினில் வறுமை உண்டாகும், வளர்ச்சி தடைப்பட்டு நாடு பின்னோக்கி செல்லும். நாடு சுயசார்பு குறைந்து வலுவிழந்து காணப்படும். இந்தியாவும் தமிழகமும் உலக நாடுகளின் முன் தலைகுனிவு அடையும் சூழ்நிலை உண்டாகும்.**

**ஆதலினால் தன்னலமான போக்கை விட்டுவிட வேண்டும். மக்களிடத்து அன்பும், கருணையும், தயவும் உடையவர்களாக சமூகநலம் காண்பவர்களாக உலகநலம் விரும்புகிறவர்களாக ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் சிறப்புடன் செயல்படுவதோடு மக்களும் பொதுநல நோக்கோடு செயல்பட வேண்டும். பொதுத்தொண்டுகளில் அனைவரும் ஈடுபட வேண்டும். இவ்விதம் செயல்பட செயல்பட நாடு விரைந்து முன்னேறி வளர்ச்சி நிலையை அடைந்திடும். நாட்டின் புண்ணியபலம் பெருகுவதாலும் நீதி நிலைநாட்டப்படுவதாலும் இயற்கை பேரிடர்களும், துன்பங்களும் அணுகாமல் பாதுகாப்பை பெற்றிடும்.**

**ஜென்மத்தைக் கடைத்தேற்றவல்ல உண்மை ஆன்மீகத்தை உலகிற்கு அருளி மக்களுக்கு உண்மை ஆன்மீக வழிகாட்டி இவ்வுலகை காத்திடவே அவதாரமாக மகா தவசியாக வந்துதித்த நல்ஞானி துறையூர் வாழ் ஞானி வள்ளல் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் நாமஜெபங்களை அவரவரும் சிந்தையுள் வைத்து ஜெபித்து அரங்கன் கூறும் தருமத்தின் கொள்கைகளை ஏற்று நடந்து அரங்கனின் தருமச்சேவைகளிலும் உலக மக்களுக்கும் தொண்டுகள் செய்வதுடன் அவரவரும் தயவினை பெருக்கி வாழ்ந்திட எல்லா மக்களுக்கும் பாகுபாடின்றி வேறுபாடுகளின்று இறையருள் பாதுகாப்பு பெருகிடும். உலகை அச்சுறுத்தும் வருத்தம்மிக்க பின்னடைவுகள் எல்லாம் விலகி நாடு வளர்ச்சி பெறும், சர்வ வல்லமையும் வளமும் இந்தியாவும் தமிழகமும் அடைந்து சிறப்படையும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.**

–சுபம்–